www.padippakam.com

Search search...

முகப்பு அறிக்கைகள் தொடர்புகளுக்கு நிகழ்வுகள்

# புலிகளின்குரல் சிறப்பு மாவீரர்நாள் ஒலிபரப்பு 2011 - அறிவித்தல்

Friday, 25 November 2011 20:20 vasan

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான புலிகளின்குரல் வானொலி நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

-----------------------------------

அன்பான தாயக, தமிழக, புலம்பெயர் தமிழ்பேசும் உறவுகளே,

தமிழீழ மாவீரர்நாள் சிறப்பு ஒலிபரப்புக்கள், நவம்பர் மாதம் 26ஆம், 27ஆம் நாட்களில் எமது வானொலியூடாக உலகம் முழுவதும் ஒலிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விரு நாட்களும் தாயக நேரப்படி அதிகாலை ஐந்துமணி தொடக்கம் இரவு பத்து மணிவரை எமது சிறப்பு ஒலிபரப்புக்கள் ஒலிக்கவுள்ளன. எமது ஒலிபரப்புக்களை எமது வலைத்தளத்திலும் செய்கோள் ஊடாகவும் நீங்கள் கேட்கலாம்.

தாயக, தமிழக உறவுகள் தங்களுக்குரிய இணையவேகத்துக்கு ஏற்றபடி எமது ஒலிபரப்புகளைக் கேட்கும் வண்ணம் எமது தளத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

மாவீரர்நாள் சிறப்பு ஒலிபரப்புக்களை உலகப்பரப்பில் ஒலித்துக்கொண்டுள்ள செய்கோள், பண்பலை வானொலிகள் ஊடாகவும் ஒலிபரப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவரின் 57ஆவது அகவை நிறைவை முன்னிட்டு 26ஆம்நாள் சிறப்பு நிகழ்ச்சியில் உங்களின் வாழ்த்துக்களையும் கவிதைகளையும் நேரடியாக இணைத்து எமது ஒலிபரப்புக்கள் ஒலிக்கவுள்ளன.

எமது மாவீரர் நாள் சிறப்பு ஒலிபரப்புக்குரிய மேலதிக விபரங்களை எமது புலிகளின்குரல் வலைத்தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

எமது வலைத்தள முகவரி :

Web: www.pulikalinkural.com

Mobile: mobilevot.com

புலிகளின்குரல் நிறுவனம் அனைத்துலக ஒலிபரப்பு

25-11-2011

விடுதலைப் புலிகள்

முகப்பு
அறிக்கைகள்
தொடர்புகளுக்கு
நிகழ்வுகள்

பத்திரிகை

1982-1990
1991-2000
2001-2010

மாவீரர்கள்



தமிழீழத் தேசியத் தலைவர்

## தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்த



உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கும் அஞ்சாத வீரத்திறகும், ஈகத்திற்கும் இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன். இப்படியானதொரு மகிமையும், மேன்மையும் வாய்ந்த ஒரு மகத்தான வீரகாவியத்தை எமது மாவீரர்கள் படைத்துச் சென்றிருக்கிறார்கள். எமது போராட்டம் ஒரு உந்துசக்தியாக, ஒரு முன்னுதாரணமாக, ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

Mobile Version Top

படிப்பகம்